## தமிழ்நாடு அரசு

### வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group I தேர்வு

பாடம் : இந்திய தேசிய இயக்கம்

பகுதி : **இரண்டாம் உலகப்போரும் தேசிய இயக்கமும் (1939-1945)**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப்-1 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள்வடிவில்தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக்குறிப்புகளுக்கானகாப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

## இரண்டாம் உலகப்போரும் தேசிய இயக்கமும் (1939 - 1945):

- 1935 -ம் ஆண்டு இந்திய அரசு சட்ட விதிகளின்படி 1937ல் தேர்தல் நடந்தன. இந்தியாவின் ஏழு மாகாணங்களில் காங்கிரஸ் அமைச்சரவைகள் அமைக்கப்பட்டன. 1939 செப்டம்பர் முதல் நாள் இரண்டாம் உலகப்போர் தொடங்கியது.
- மக்களை கலந்து ஆலோசிக்காமலேயே, பிரிட்டிஷ் அரசு இந்தியாவை போரில் ஈடுபடுத்தியது. காங்கிரஸ் இச்செயலை கடுமையாக எதிர்த்தது. தங்களது எதிர்ப்பை காட்டும் வகையில் 1939 டிசம்பர் 12-ம் நாள் மாகாணங்களில் பதவியிலிருந்த காங்கிரஸ் அமைச்சரவை பதவி விலகின இதனை முஸ்லீம் லீக் "விடுதலை நாளாகக்" கொண்டாடியது. 1940 மார்ச்சில் முஸ்லீம் லீக் பாகிஸ்தான் கோரிக்கையை முன் வைத்தது.

## தனிநபர் சத்தியாகிரகம்:

- இரண்டாம் உலகப்போரின் போது இந்தியர்கள் ஆதரவைப்பெறுவதற்காக பிரிட்டிஷ் அரசாங்கம் 1940 ஆகஸ்ட் 8- ம் நாள் "ஆகஸ்டு" சலுகையை அறிவித்தது. போருக்குப் பின் புதிய அரசியலமைப்பை வரைவதற்காக இந்தியப் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு அமைப்பு ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. காந்தி இதனை ஏற்க மறுத்து, தனி நபர் சத்தியா கிரகத்தை தொடங்க முடிவு செய்தார்.
- தனிநபர் சத்தியாகிரகம் என்பது வன்முறையற்ற குறைந்த அளவில் ஒரு அடையாளமாக நடத்தப்பட்ட இயக்கமாகும். சத்தியாகிரகத்தில் ஈடுபடுபவர்களை காந்தியே தேர்வு செய்தார். முதலில் தனிநபர் சத்யாகிரகத்தில் ஈடுபட்டவர் ஆச்சார்ய வினோபா பாவே ஆவார். அவருக்கு மூன்று மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அடுத்து ஜவஹர்லால் நேரு தனிநபர் சத்யாகிரகத்தில் ஈடுபட்டு 4 ஆண்டுகள் சிறைத்தண்டனை பெற்றார். தனிநபர் சத்யாகிரகம் 15 மாதங்கள் நீடித்தது. மூன்றாவதாக சர்தார் வல்லபாய் படேல் தனிநபர் சத்யாகிரகத்தில் ஈடுபட்டார்.